


- வாழ்வோம்

# வலையோசை

சோஷியல் மீடியாவில் சுற்றி வரும் சுவாரஸ்யங்கள்... உங்களுக்காக!

**TONYXTHALA**

விஜய் : என்னப்பா தித்திப்பு கம்மியா இருக்கு?

டீ கடை அண்ணா : நீங்க வந்ததுக்குப் பிறகு, சர்க்கரை விலை ஏறிடுச்சு தெரியுமா?

விஜய் : அப்போ, டீயாவது திக்கா இருக்கணும்ல?

டீ அண்ணா : ஆவின் பால் தட்டுப்பாடுனால, பிரைவேட் பால் அதிக விலையில வாங்குறோம் சார்! அதிக தண்ணி சேர்த்தாகணுமே..

**ilango manivannan**

கரப்பான் பூச்சிகளால் பாஸோட அடித்தட்டே பிஞ்சி கிடக்குது... இந்த லட்சணக் கூந்தலில் உனக்கு EVM மிஷினில் ஃப்ராடு பண்ணணும்...




**M.T.R**

டலபதி, இன்னும் இரண்டு தெருதான் பொறுத்துக்கோங்க.

அடேய்! நா 6 மணிக்கு மேல எங்கயும் போனதே இல்லடா! விட்டுருங்கடா!



**REMO**

2026 தேர்தல்ல நீ இஷ்டத்துக்குப் பேசுவ, உன்ன யாரும் கண்டுக்கல.

ஆனா, இன்னைக்கு ஒரு திணிக்கப்பட்ட இடைத்தேர்தல்ல..

ஒரே தொகுதியில 39 இடத்துக்கும் ரோடு ஷோ, அஞ்சு மணி நேரம் ரோடு ஷோன்னு உன்ன தண்ணி குடிக்க விடுறாங்க பாரு.

இது ஆரம்பம்தான் போகப் போகத்தான் தரமான செய்கையைப் பார்ப்பீங்க தற்குறிகளா.



**ஆல்தோட்டபூபதி**

அத்தனை பேர் செத்தப்ப நைட்டோட நைட்டா ஓடுனவனும், இப்ப ஒட்டுக்காக நைட்டுல தெருத்தெருவா சுத்தறவனும் ஒரே ஆளா?



இடைத்தேர்தல் வாக்குப்பதிவு வரை மக்கள் விழிப்புடன் இருந்து, விஜய் செய்த ஜனநாயகத் தவற்றுக்குப் பாடம் கற்பிக்க வேண்டும் எனத் தனது `எக்ஸ்' தளத்தில் கருத்துப் பகிர்ந்துள்ளார், அரசியல் பதிவர் சண்முகம் சின்னராஜ். அவரது பதிவில்...

``இளவரசர் போல் `கேரவன் பிரச்சாரம்' செய்தவர், தனக்கு முன்னால் கூட்டப்பட்ட கூட்டத்தின் முன்பாக மட்டுமே கத்திக்கத்தி `பஞ்ச் டயலாக்'காகப் பேசியவர், பொதுமக்களைப் பெரிதும் மதிக்காதவர். இப்போது, மற்ற தலைவர்களைப் போல் திண்ணைப் பிரச்சாரத்திலும் டீக்கடைப் பிரச்சாரத்திலும் இறங்கியுள்ளார்! எப்படி இந்த மாற்றம்?

இந்த இடைத்தேர்தலே விஜய் செய்த ஜனநாயக விரோதச் செயலால்தான் வந்துள்ளது என்பது மக்களுக்குத் தெளிவாகப் புரிந்துவிட்டது!

## பாடம் கற்பிக்கட்டும் மக்கள்!

``இவிங்க பணத்தைக் குடுத்து வாங்கு வாய்ங்களாம்... திரும்ப நிறுத்துவாய்ங்களாம்... நாம முட்டாப்பயக மாதிரி, திரும்ப ஓட்டுப் போடணுமோ? இவனுங்க கோடி கோடியா சம்பாதிக்க நாம ஓட்டு போடணுமா?'' என்ற குரல்கள், இரு தொகுதிகளிலும் ஆங்காங்கே கேட்கின்றன! இதில் தோல்வியடைவது விஜய்க்குக் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது! எப்படியாவது ஜெயிக்க வழி தேடுகிறார்! தப்புக்குப் பரிகாரம்போல் ஓட்டுக்குப் பணத்தை அள்ளித் தருகிறார்! அப்படியும் `வெற்றி இலக்கை'த் தொடுவது கடினம் என `ரெட் அலர்ட்' வந்ததால், மக்களிடம் இறங்கி வந்து, நெருங்கி வந்து கேன்வாஸ் செய்யும் கட்டாயம்!

உண்மையில், இனிவரும் காலத்தில் அ.தி.மு.க.வில் பர்ச்சேஸ் செய்து, இடைத்தேர்தலில் அவர்களை நிறுத்தி பிரச்சாரம் செய்து, வெற்றிபெற வைப்பது கடினமென்பதால், முதன்முறையாகப் பதற்றத்தோடு வலம்வருகிறாராம். அதனால்தான் பிரச்சாரத்திலும் இத்தனை தடுமாற்றம்!

தேர்தல் வரை மக்கள் விழிப்போடிருந்தால், விஜய் செய்த ஜனநாயகத் தவற்றுக்குப் பாடம் கற்பிப்பது உறுதி!'' என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஃப்ளாஷ்பேக்



## மகனை வாழ்த்திய தலைவர்!



ஓ.சி.எஃப்.ராஜேந்திரன்

2018-ஆம் ஆண்டு, என்னுடைய மகன் வெளிநாட்டில் இருந்து வந்தபோது, தலைவரைப் பார்க்க வேண்டும் என விரும்பினான். உடனே மகன், மருமகள், பேத்தியுடன் அண்ணா அறிவாலயம் வந்து, கழகத் தலைவர் அவர்களைப் பார்த்து, என் மகனை அறிமுகம் செய்தேன். தலைவர், "வெளிநாட்டில் வேலையெல்லாம் எப்படி இருக்கிறது" என்று விசாரித்து, என் மகனுக்கு வாழ்த்துக் கூறிய அந்த நாளை என்றும் மறக்க மாட்டேன். எனக்கு வயது 70 என்றாலும் கழகப் பணியில் தொய்வின்றி ஈடுபடுவது மகிழ்ச்சி அளிக்கிறது.

**- ஓ.சி.எஃப்.ராஜேந்திரன்,**
**கழக இலக்கிய அணி அமைப்பாளர்,**
**வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியம், அவைத் தலைவர்,**
**கொள்ளுமேடு கிளை.**

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள்.
அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614,
அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com




# தெரிந்து கொள்வோம்

**1948** `திராவிட நாடு' இதழுக்கு 3,000 ரூபாய் அபராதம்.

**1949** `ஆரிய மாயை' நூலுக்குத் தடை-பேரறிஞர் அண்ணாவுக்குச் சிறை.

**1950** `வகுப்புவாரி பிரதிநிதித்துவம் செல்லாது' எனத் தீர்ப்பு.

**1950** `காந்தியார் சாந்தியடைய' நூலை எழுதியதற்காக ஏ.வி.பி.ஆசைத்தம்பி கைது.

**1950** சென்னை செயின்ட் மேரி மண்டபத்தில், தி.மு.க. மாணவர் மாநாடு.

**1951** திருவாரூரில், `அழகிரி மாளிகை' நிறுவ கலைஞர் நிதி திரட்டல்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900